## தண்டனைவிலக்கு தொடர்பாகவும் கொலைகள் தொடர்பாகவும் புதியதொரு பரிமாணம்

ஊடகவியலாளர்களை மௌனிக்கச்செய்வதற்கும் ஊடகங்களை அச்சுறுத்துவதற்கும், அல்லது எங்களது தகவல் வழங்கும் பொது பாத்திரத்தை இழிவுபடுத்துவதற்கும் மேற்கொள்ளப்பட்டு வரும் வழக்கமாக செயல்பாடாக இருக்கலாம், எனினும், சமீபத்திய வாரங்களாக நாம் உலகளாவிய ரீதியில், தண்டனை நீக்கம் தொடர்பாக ஒத்துழைப்பை நாடி நிற்கும் ஒரு துறை பற்றிய புதியதொரு பரிமாணத்தை கண்டு வருகிறோம்.

ஐரோப்பாவின் ஊழல்களை வெளிச்சமிட்டுக் காட்டுவதாய் இருக்கட்டும், அமெரிக்காவின் பொய்களைக் அம்பலப்படுத்தப்படுத்துவதாய் இருக்கட்டும் அல்லது சவூதி அரசினால் அனுமதிக்கப்பட்ட கொலைக்கு நியாயம் கோருவதாயும் இருக்கட்டும், உலகெங்கிலும் உள்ள பத்திரிகையாளர்கள் அவர்களை பாதுகாக்க வேண்டிய சக்திகளினாலேயே சத்தியத்தை சிதைக்கும் வகையில், தொடர்ச்சியாக அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

அண்மைய வாரங்களில் இடம்பெற்ற பின்வரும் மூன்று தனித்தனி சம்பவங்கள் நாம் எதிர்க்க வேண்டிய அளவை சுட்டிக்காட்டுகிறது.

- இஸ்தான்புல் நகரில் சவுதி அரேபிய தூதரகத்திற்குள் சென்ற ஜமால் கசோக்ஜிக்கு வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பை - அவர் என்னதான் எதிர்க் கருத்து கொண்டிருந்த போதும் - வழங்குவதற்கு சவூதி அரசு பட்டிருந்த கடமையில் இருந்து தவறியுள்ளது. கசோக்ஜி காணாமல் போன விதமும் பிறகு அவர் சித்திரவதை செய்யப்பட்டு கொலைசெய்யப்பட்ட விதமும் சவூதி அரசு மாற்றத்தை நோக்கி ஓர் அங்குலமேனும் நகர்வதற்குத் தயாரில்லை என்பதையும் விமர்சன குரல்களை ஒழிப்பதற்கு அது எந்த தூரத்துக்கும் செல்லத் தயார் என்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

- அக்டோபர் 2017ல் கொல்லப்பட்ட டாப்னே கருவானா கலீஸியாவின் மரணம் தொடர்பாக பொது விசாரணை மேற்கொள்ள எழுந்த குரலை மால்டா அரசாங்கம் உதாசீனம் செய்தது. ஒருவேளை அவருக்கு வழங்கியிருக்கவேண்டிய பாதுகாப்பை வழங்காதுவிட்ட தமது தவறு வெளிப்பட்டுவிடும் என்ற அச்சம் காரணமாக இருக்கலாம்.

- அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஊடகங்களுக்கு எதிரான கருத்துக்களை தொடர்சியாக கூறிவருகின்றார். ஊடகவியலாளரைத் தாக்கிய செனட்டர் தெரிவுசெய்யப்பட்டது தொடர்பாக ட்ரம்ப் மகிழ்ச்சி தெரித்ததானது ஊடகங்களுக்கு எதிரான அவரது மனோநிலையை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் ஊடகங்களுக்கும் அதிகாரத்திற்கும் இடையிலான உறவு ஒருபோதும் சுமுகமாக இருப்பதில்லை. அப்படித்தான் இருக்கவும் வேண்டும். ஊடகங்கள் ஒருபோதும் புகழ்ந்து பேசவோ சமரசம் பேசவோ அல்லது முட்டாள்தனமான அங்கீகாரத்தை வழங்கவோ மாட்டாது. குற்றங்குறைகளை நாம் கண்டும் காணாததுபோல் இருப்பதுமில்லை. அவற்றை விமர்சிக்கத் தவறுவதுமில்லை. மக்கள் நலனுக்காக புலனாய்வில் ஈடுபடுவதற்கு பின்நிற்பதும் இல்லை.

பெருகிவரும் அரசியலைத் தொழிலாகக் கொண்டோரின் அதிருப்தி, அரசியல் அடிவருடிகளின் தொடர்ச்சியான தொல்லை ஆகிவற்றுக்கிடையில் ஊடகங்களும், அவை வரவேற்கப்படாத இடங்களில் மூக்கை நுழைத்து, ஓயாது குரல் எப்புவதில் உறுதியாய் உள்ளன. ஊடகங்கள்

அவ்வாறு செய்வதனால் அவற்றுக்கு ஏற்படும் இழப்புகளோ அதிகம். மக்கள் நலனில் அக்கறைக்கொண்ட முன்வரிசை ஆண், பெண் ஊடகவியலாளர்கள் முன்னெப்போதையும் விட அதிக ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்பது கண்கூடு. அவர்களது உரிமையினைக் காப்பதற்கு, அரசுகளும் இன்றுபோல் ஒருபோதும் தயக்கம் காட்டியதுமில்லை.

பத்திரிகை முயற்சிகளுக்கான அச்சுறுத்தல்கள், முன்னெப்போதையும் விட பரவலாக இருக்கும் சமயத்தில், நவம்பர் மாதம் 2ம் திகதி ஊடகங்களுக்கு எதிரான குற்றச்செயல்களுக்கு தண்டனைவிலக்கை நீக்கக்கோரும் சர்வதேச தினமும் அனுட்டிக்கப்படுகிறது. பத்திரிகையாளர் கொலைகள் தொடர்பாக தீர்க்கப்படாத வழக்குகள் (1992ம் ஆண்டிலிருந்து 848 ஆகும்). இது ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு தொடர்பான விவாதங்களில் இன்றும் ஆதிக்கம் செலுத்தும் விடயமாகும்: 90 வீதமான கொலை சம்பவங்கள் இன்னும் துலக்கப்படாமலேயே இருக்கின்றன என்பது ஓர் அதிர்ச்சி தரும் தகவலாகும். இதுவே துறைசார்ந்த செயல்பாட்டார்களையும் அவர்களுக்கு உதவும் சர்வதேச அமைப்புகளையும் ஒருங்கிணைத்து, துரித தீர்வுகளை வழங்குவதற்கும் அவ்வெண்ணிக்கையை குறைப்பதற்குமான நடவடிக்கை எடுப்பதற்கு நாடுகள் மீது அழுத்தம் கொடுத்து வருவதற்கான காரணமாகும்.

தண்டனைவிலக்கை நீக்குவதற்கு, அது பரவலாக இடப்பெறும் நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அவசியமான உயர் ‘முயற்சிகள்’ ஒரு தொடர்ச்சியான நடவடிக்கையாகும். பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படைகளை பலப்படுத்துவது, நீதித்துறையினருக்கு பயிற்சி வழங்குவது மற்றும் சட்டத்தின் ஆட்சியை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துவது ஆகிய அனைத்தும் சர்வதேச பிரகடனங்களால் விதந்துரைக்கப்பட்டுள்ள விடயங்களாகும். ஊடகவியலாளர்கள், அவர் எங்கு சேவை புரிவோராக இருந்தபோதும், அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு, அதற்கான முயற்சிகளை முறைமைப்படுத்தி, செயல்படுத்துவது அவசியத் தேவையாகும்.

தண்டனைவிலக்கை முடிவுக்குக்கொண்டுவரும் முயற்சிகள் அனைத்தும், தற்போதைய அரசியல் சூழலில், ஒரு பின்னடைவை கண்டுள்ளது போன்று தோற்றமளிக்கிறது. அது மட்டுமல்லாமல், எதிர்த்துப் போராடுவதற்காக பெறப்பட்ட பல சாதனைகளின் மீது சிரமங்களைத் தோற்றுவித்த, வீணான செயல்பாடுகளாகவும் அவை தோற்றமளிக்கின்றன.

பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விதிக்கப்படுவதற்கு அரசியல் உறுதிப்பாடு அல்லது உறுதிப்பாடற்ற நிலை, பிரச்சினையை தீர்ப்பதில் முக்கிய, நீண்டகால தடையாக உள்ளது. திறந்த வழக்குகளினது முன்னேற்றம் பற்றிய அடிப்படை தகவல்களை கூட வெளியிடுவதற்கு விருப்பமில்லாதது, முழுமையான விசாரணைக்கு வேண்டிய ஆதாரங்களை வழங்குவதற்குத் தயங்குவது, அல்லது குற்றவாளிகள் தொடர்பானது மட்டுமல்லாமல் - முக்கியமாக - படுகொலைகளுக்கு பின்னணியில் உள்ள தலைவர்கள் (பெரும்பாலும் உயர் அதிகாரிகள் அல்லது தனிநபர்கள் அல்லது உயர் அரசியல் செல்வாக்குள்ளவர்கள்) தொடர்பான தகவல்களை வெளியிட காட்டப்படும் தயக்கம் ஆகியவற்றோடு ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பு பயிற்சிகள் வழங்கும் முயற்சிகள் மற்றும் ஊடக நெறிமுறைகளை மேம்படுத்துவதற்கான உள்;ர் முயற்சிகள் ஆகியவற்றிற்கு எதிராகவும் தொடர்ச்சியான தடைகள் இருந்து வருகின்றன.

பாதுகாப்பு கலாசாரத்தை மேம்படுத்த ஒத்துழைக்கும் ஒவ்வொரு ‘தரப்பினரும்’ தத்தமது பங்கை செலுத்தக் கடமைப்பட்டுள்ளனர். ஆயினும், கசப்பான உண்மை என்னவென்றால்,

அனைத்து முயற்சிகளும் இருந்தபோதிலும், பல நாடுகளில் அரச ஒத்துழைப்பு - சொல்லிலும் செயலிலும் - இருப்பதில்லை, அதனால், எவ்வித முன்னேற்றமும் ஏற்படப்போவதில்லை.

ஆனாலும், ஏனையோர் அவ்வாறான குற்றங்களில் - 'அது' ஒரு கொடூரமான படுகொலை அல்லது வன்முறை கலாச்சாரத்தை இயல்பாக்குவதாய் இருப்பினும் - இருந்து தப்பிப்பிப்பதை காண்கையில் அரசு அதனது பொறுப்புக்கூறல் அளவீட்டை குறைந்த மட்டத்திற்கு மீட்டமைக்கிறது என்பது வேதனைக்குரியது.

தண்டனைவிலக்கு கலாச்சாரத்தை எதிர்த்துப் போராடுவதற்கான உண்மையான முயற்சியில் ஈடுபடுவதற்கு பதிலாக, சவூதி அரேபியா, மால்டா மற்றும் அமெரிக்கா இன்னும் பல நாடுகளில், இந்த நிலையை இன்னும் மோசமாக்கும் செயற்பாடுகளையே நாம் காண்கின்றோம். சோமாலியா, சிரியா, ஈராக், தெற்கு சூடான், பிலிப்பைன்ஸ், மெக்ஸிக்கோ, பாக்கிஸ்தான், பிரேசில், ரசியா, பங்களாதேஸ், நைஜீரியா மற்றும் இந்தியா (2017 ஊீது உலகளாவிய தண்டனைவிலக்குக் குறியீட்டைப் பார்க்கவும்) ஆகிய நாடுகளின் அரசுகளை, அவர்களின் நிலையினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவது கடினமானதாக ஆகியுள்ளது மற்றுமல்லாமல் அதனை சாத்தியமற்றதாயும் ஆக்கியுள்ளது.

மேலும் ஊடகவியலாளர்கள் நீதியின் மீது நம்பிக்கையிழந்த நிலையில் தொடர்ந்து உயிரிழந்து கொண்டிருக்கின்றனர் என்று சொல்லுமளவுக்கு நிலைமை மோசமாக மாறியுள்ளது.

சமீபத்திய அந்த மூன்று சம்பவங்கள் ஊடகவியலாளர்களை இலக்காகக் கொண்டவர்களுக்கு வழக்கத்தை விடவும் காரியம் எளிதாக மாறியுள்ளது என்பதையே காட்டுகின்றது. இவை தண்டனைவிலக்குக்கு எதிரான போராட்டத்தில் அரசின் பொறுப்புணர்வை சந்தேகிக்கச் செய்கின்றன.

ஊடகவியலாளர்களுக்கு ஒரு கொடிய பிராந்தியத்திமாக உள்ள பிரதேசத்தில், அதன் பூகோள அரசியல், பொருளாதார மற்றும் மத செல்வாக்கின் மூலம், சவுதி அரேபியா மில்லியன் கணக்கான மக்களுக்கு அவர்களது வாழ்க்கை முறை எவ்வாறு அமைய வேண்டும் என்று ஆணையிடுகின்ற தொனியாக இது அமைந்துள்ளது. எல்லையற்ற சர்வாதிகாரம் அந்நாட்டுத் தலைவர்களை சட்டத்தின் ஆட்சிக்கு அப்பால் இருப்பதாக உணர ஊக்குவித்திருக்கிறது, ஜமால் கசோக்ஜி கொலைக்கு பொறுப்புக்கூற சவூதிக்கு வலியுறுத்தத் உலகம் தவறுமாயின் இப்பிரதேசத்தில் மனித உரிமை மற்றும் அதிக சுதந்திரம் ஆகியவற்றுக்கான கோசம் வெற்றுக்கோசமாக ஆகிவிடும் என்பது திண்ணம். ஊடகவியலாளர் உரிமை மீறலில் உலகின் மிக மோசமான நாடுகளில் ஒன்றான, சுதந்திர ஊடகவியலுக்கு நண்பனல்லாத துருக்கி, துல்லியமான விசாரணையை நடத்தி உண்மையை அம்பலப்படுத்தும் என்று நம்புவதானது இன்னும் அதிக வேதனைத் தரும் விடயமாகும்.

இதேபோல், மோல்டாவில் இடம்பெறும் சம்பவங்கள் ஐரோப்பிய கொள்கைகளையும் சுதந்திர ஊடகங்களை வளர்க்கும் அதனது செயல்திட்டங்களையும் அதனை முன்னுதாரணமாகக் கொண்டு அதனுடன் இணைந்து செயல்பட உள்ளோருக்கு ஒரு பரீட்சையாக அமைந்துள்ளது. ஐரோப்பாவின் மனித உரிமை அடிப்படையிலான அதன் எல்லை தாண்டிய அணுகுமுறை காரணமாமாக அதன் சொந்த குறைபாடுகளை மதிப்பிடுவதற்கு பயன்படுத்துகின்ற மங்கலான கண்ணாடியை பயன்படுத்தும் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தால் வெளிப்படை தன்மையையும் பொறுப்புக்கூறலையும் குறைத்து, மனித உரிமை நிலை இன்னும் கீழ்நோக்கி சறுக்கும் ஆபத்து உள்ளது.

மேலும், அமேரிக்கா அதனது தற்போதைய நிர்வாகத்தின் கீழ் (பத்திரிக்கை சுதந்திரத்தில், சர்வதேச மனித உரிமைகளில் பலவற்றை மீறி இருப்பதன் காரணமாக) உலக மேலாதிக்கத்தையும் அதிகாரத்தையும் இழந்துவிட்டதால், உலகினால் உன்னதமாக மதிக்கப்பட்ட அதனது உரிமை காப்பு தொடர்பான முதல் திருத்தச் சட்டத்தை அதனாலேயே உத்தரவாதம் செய்ய முடியாதுள்ள நிலையில் உலகின் பார்வையில் குறைந்தபட்ச விமர்சனத்தையேனும் அதனால் தாக்குப்பிடிக்க முடியாதுள்ளது. முப்படைகளின் தளபதி பத்திரிகைக்காரர்களைத் தாக்கிய ஒருவரை அவரது வாயாலேயே, ”எனது அன்புக்குரியவர்” என்று குறிப்பிட்டதானது ஊடகவியலாளர்களைத் தாக்கியதை நியாயப்படுத்தும் செயலேயாகும், அது கவனிக்கத்தக்க விடயமுமாகும். இதனது மோசன நிலை என்னவெனில், தங்கள் சொந்த நிகழ்ச்சிநிரல்களை வடிவமைக்கும் பொருட்டு அமெரிக்க ஜனாதிபதியின் அலுவலகத்தில் இருந்து கிடைக்கும் சைகையினை, பின்பற்றுவதற்கு தகுந்தது என எடுத்துக்கொள்வது - கொடூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனைவிலக்குக்கு எதிரான போராட்டத்தில் முன்னேற்றம் எதனையும் இது ஏற்படுத்தப் போவதில்லை. ஊடகங்களை மௌனிக்கச் செய்யும் முயற்சிகள் புதிதல்ல, உண்மையில், பத்திரிகையாளர்களை பாதுகாக்க வேண்டும் என்ற அணுகுமுறை நிர்பந்தம் அந்த நாடுகளிலோ அல்லது அவற்றின் தலைமையிடமோ இல்லை. சமீபத்தில் நடந்த சம்பவங்களோடு பார்க்கையில் மறைத்திருந்த திரைச்சீலை நீக்கப்பட்டு, அவர்கள் உண்மையில் யார் என்பதை தெளிவாக பார்க்கக்கூடியதாக உள்ளது. பாசாங்கு செய்தது போதும், ஒருவேளை, இதுவே எம்மை முன்னோக்கி நகர்த்தும் இறுதியான ஒன்றாகவும் இருக்கலாம்.

ஆண்ட்ரூ ஹஸ்லொப்
இயக்குனர், ஊடக சுதந்திரம்
WAN-IFRA
andrew.heslop@wan-ifra.org
@FreeMediaWorld
#EndImpunity, #TruthNeverDies